## இந்திய உயர் ஸ்தானிகராலயம்
## கொழும்பு

************

### ஊடக அறிக்கை

### எல்லைகள் கடந்து சமாதானத்தை நிலைநாட்டும் இந்திய - இலங்கை படையினரின் நட்புறவு

தென் சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் படையணியில் சேவையாற்றும் இந்திய இலங்கை படையினரின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் போரில் (BOR) உள்ள ஐநா படைத்தளபதியிடமிருந்து 135 இந்திய அமைதிப்படையினரும் 103 இலங்கை அமைதிப்படையினரும் பதக்கங்களை பெற்றுள்ளமை இந்திய இலங்கை படையினர் இடையிலான நட்புறவு மற்றும் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பு எல்லைகள் கடந்து நீடிப்பதற்கு சான்று பகர்வதாக அமைகின்றது,. தென் சூடானில் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையின் ஆணையினை நிறைவேற்றுவதற்கான இந்திய மற்றும் இலங்கை அமைதிப் படையினரின் சேவைகளுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் அவர்களது பங்களிப்பினை ஐக்கிய நாடுகள் படையணியின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சைலேஷ் தினைகர் பாராட்டியுள்ளார்.

2. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த துருப்புக்களுக்கு மத்தியில் இந்த அமைதிப் படையினர் பதக்கங்களுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தென் சூடானின் ஐக்கிய நாடுகள் அமைதிப்படை அணியின் மொத்த எண்ணிக்கையில் 2418 இந்தியர்களும் 686 இலங்கையர்களும் இணைந்து 70 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பினை கூட்டாக வழங்குகின்றனர்.

3. போர், பிபோர் ஆகிய இடங்களில் இந்திய அமைதிப் படையினர் பணிக்கமர்த்தப்பட்டிருக்கும் அதேநேரம் அகோபோவில் உள்ள தற்காலிக நடவடிக்கை முகாமிலும் அவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பதக்கங்களை வென்றுள்ள இலங்கை படையினர் 'ப்ளூ பெரெட்ஸ்" விமான படையணியை சேர்ந்தவர்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முகாம்களை அமைத்தல் போன்ற சிவில் இராணுவ ஒத்துழைப்பு செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இந்திய அமைதிப் படையினர்

தென் சூடானின் மிகவும் பதட்டமான பிராந்தியங்களிலும் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். கடந்த காலத்தில் 2 ஹெலிகாப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட போதிலும் இலங்கை அமைதிப் படையினர் ஓய்வற்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

4. பாதுகாப்பு துறையில் இந்தியாவும் இலங்கையும் மிகவும் நெருக்கமான உறவினை பகிர்ந்து கொண்டுள்ளன. சுற்றுச்சூழல் தொடர்பான அச்சுறுத்தல்களை களைவதற்கும் எம்.வி. எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயினை அணைப்பதற்காகவும் கோரிக்கை விடுக்கப்பட்ட ஒருசில மணித்தியாலங்களுக்குள் இந்தியா பல்வேறு கப்பல்களை உடனடியாக கடமையில் ஈடுபடுத்தியிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். பிராந்தியத்தில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு முதலில் பதிலளிக்கும் இந்தியாவின் வகிபாகம் 2020 செப்டம்பர் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பரேஷன் சாகர் ஆரக்ஷா1 நடவடிக்கையின் போதும் 2017 இல் இலங்கையில் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கின் போதும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், கூட்டுப் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக பாதுகாப்பு துறையில் காணப்படும் இருதரப்பு ஈடுபாட்டின் பல்பரிமாண தன்மை காணப்படுகிறது.

******

கொழும்பு
18 ஜூன் 2021